என்ன சந்திரகுமார்? (குறுக்கீடுகள்) நாளைக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அது எனது ஆய்வில் இருக்கின்றது. (குறுக்கீடுகள்) பதில் வந்தவுடன் நான் ஒவ்வொன்றாக எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) இன்றைக்கு ஒன்று எடுத்துள்ளேன். பதில் வர வர ஒவ்வொன்றாக வரிசையாக எடுக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. பதில் வர வேண்டும். (குறுக்கீடுகள்) இல்லை, அதெல்லாம் வித்தியாசம் ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) பதில் வர வர ஒவ்வொன்றாக எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) தினசரி எடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன். உட்காருங்கள்.

5. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. பி.ஜி. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கல்விப் புரட்சியையும், தொழில் புரட்சியையும் உருவாக்கி, உலகத்தரம் வாய்ந்த கல்வியால் தமிழகத்தினை அறிவுசார் தலைநகரமாகவும், தொழில் துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் பெரிதளவில் ஈர்க்கப்பட்டு பல புதிய தொழில்கள் துவங்கப்பட்டு தமிழகத்தினை புதுமைகள் படைக்கும் மையமாக மாற்றியமைக்கத் திட்டமிட்டு, செயலாற்றிக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து ஒன்றாவது முதல் நூற்று நாற்பத்தைந்தாவது வரையிலான 15 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.